செ.வெ.எண் : 24 நாள்: 11.04.2025

# நாகப்பட்டினம் மாவட்டத்தில் செயல்படும் சத்துணவு மையங்களில் காலியாகவுள்ள சமையல் உதவியாளர் பணியிடத்திற்கு விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ப.ஆகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் பள்ளிகளில் செயல்படும் சத்துணவு மையங்களில் காலியாக உள்ள 93 சமையல் உதவியாளர் பணியிடங்கள் நேரடியாக நியமனம் செய்யப்படவுள்ளன. வட்டாரம் வாரியாக நேரடி நியமனம் செய்யப்படவுள்ள சமையல் உதவியாளர் பணியிடங்களின் எண்ணிக்கை அந்தந்த வட்டார வளர்ச்சி அலுவலகங்கள், நகராட்சி அலுவலகங்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இனசுழற்சி வாரியாக தெரிந்து கொள்ளலாம்.

சத்துணவு மையங்களில் காலியாகவுள்ள சமையல் உதவியாளர் பணியிடம் தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்படும். ஓராண்டு கால பணிக்குப் பின்பு சிறப்பு காலமுறை ஊதியத்தில் (ஊதிய நிலை 1) (Level of pay – ரூ.3000-9000)) ஊதியம் வழங்கப்படும். இப்பணிக்கு பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

வயது வரம்பு அறிவிப்பு தேதியினை கொண்டு கணக்கிடப்படும்.

அ. 21 முதல் 40 வரை (பொது மற்றும் தாழ்த்தப்பட்டோர்)

ஆ. 18 முதல் 40 வரை (பழங்குடியினர்)

இ. 20 முதல் 40 வரை (விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டோர்)

குறைந்தபட்ச கல்வி தகுதி 10ம் வகுப்பு தோல்வி / தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தமிழில் சரளமாக பேச தெரிந்திருக்க வேண்டும். நியமனம் கோரும் மையத்திற்கும் விண்ணப்பதாரரின் குடியிருப்பிற்கும் இடைப்பட்ட தூரம் 3 கி.மீ—க்குள் இருக்க வேண்டும். காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் / நகராட்சி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். **விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் 28.04.2025 மாலை 5.45 வரை** விண்ணப்பத்துடன் பள்ளி மாற்றுச்சான்றிதழ், SSLC மதிப்பெண் சான்றிதழ், குடும்ப அட்டை, இருப்பிடச்சான்று, ஆதார்அட்டை சாதிச்சான்று போன்றவற்றின் நகல் இணைக்கப்பட வேண்டும். விதவை, கணவரால் கைவிடப்பட்டோர், மாற்றுத்திறனாளிகள் அதற்கான சான்றிதழ்களின் நகல்களையும் இணைக்க வேண்டும். நேர்முக தேர்வின்போது அசல் சான்றிதழ்களுடன் கலந்து கொள்ள வேண்டும். விண்ணப்பதாரர்களுக்கு தொடர்புடைய வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர் மூலமாக நேர்காணல் அழைப்பு கடிதம் அனுப்பி வைக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ப.ஆகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**